DINAMANI

17 APRIL 2022

PAGE 4

# புதுச்சேரி பல்கலை.க்கு வந்த சூரிய மின்னாற்றல் விழிப்புணர்வுப் பேருந்து

**புதுச்சேரி, ஏப்.16:** சூரிய மின்னாற்றல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் மும்பை ஐஐடி பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி உருவாக்கிய, முழுவதுமாக சூரிய மின்னாற்றலில் இயங்கும்பேருந்து புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் வந்தது.

மகாராஷ்டிர மாநிலம், மும்பை ஐஐடி பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி, சூரிய ஆற்றல் சேமிப்பு, பாதுகாப்பு, பயன்பாட்டை ஊக்குவிக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் முழுவதுமாக சூரியமின்னாற்றலில் இயங்கும் பேருந்தை உருவாக்கினார்.

இந்தப் பேருந்து 3.2 கிலோவாட் சூரிய மின் தகடுகள், 6 கிலோவாட் மின்கலம் சேமிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதில் 3 கிலோவாட் இன்வெர்ட்டரும் உள்ளது. பேருந்தில் விளக்குகள், குளிர்விப்பான், சமையல் அடுப்பு, இதர சாதனங்கள் அனைத்தும் முற்றிலும் சூரிய சக்தியில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.




புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு வந்த சூரிய மின்னாற்றல் விழிப்புணர்வுப் பேருந்து.

பேராசிரியர் சோலங்கி, மத்தியப் பிரதேச அரசின் சூரிய சக்தியின் தூதுவராகவும், எனர்ஜி ஸ்வராஜ் அறக்கட்டளையின் நிறுவனராகவும் உள்ளார். இவர், 2020 நவம்பர் தொடங்கி 2030-ஆம் ஆண்டு வரை திட்டமிட்டு, இந்த சூரியமின்னாற்றல் பேருந்து மூலம் 'எனர்ஜி ஸ்வராஜ் யாத்ரா' விழிப்புணர்வை மேற்கொண்டுள்ளார். இந்தப் பேருந்து புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் வந்தது. இதையடுத்து, பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பசுமை ஆற்றல் தொழில்நுட்பம் குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பேராசிரியர் சோலங்கி, ஆற்றல், காலநிலை மாற்றம் என்ற தலைப்பில் பேசினார். வழக்கமான ஆற்றல் வளங்களைச் சார்ந்து இருப்பதைவிட தனி நபர்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் சூரிய ஆற்றலுக்கு மாறுமாறு அவர் அறிவுறுத்தினார். துணைவேந்தர் குர்மீத்சிங்தொடக்கஉரையாற்றினார். துறைத் தலைவர் பி.ஏழுமலை வரவேற்றார். பேராசிரியர் ஆர். பிரசாந்த் நன்றி கூறினார்.